6. தகவல் கோரல்

சட்டமன்றத்திற்கு வானொலி தனது சொந்த நிருபரை அனுப்புதல்.

*டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே: தங்களுடைய மேலான கவனத்திற்கும், அவை முன்னவர் அவர்களுடைய மேலான கவனத்திற்கும் ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். ஒன்றும் பிரச்னையாக இல்லை. இதை நீங்கள் இருவரும் முயற்சி செய்தால் தீர்த்து வைக்க முடியும். ஒவ்வொரு நாளும் வானொலியிலே 7 மணி அளவில் ' சட்ட மன்றத்தில் இன்று ' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது. அதற்கு ஒவ்வொரு பத்திரிகை நிருபர்களும் ஒவ்வொரு நாள் நியமிக்கப்பட்டு அவர் தரும் செய்தி வானொலியிலே படிக்கப் படுகிறது. ஒவ்வொரு பத்திரிகையின் நிருபர்களும் அனுமதிக் கப்படுகிறார்கள் என்ற காரணத்தால், அவர்கள் எல்லாம் அந்தப் பத்திரிகையின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்தால் அந்தச் சூழலிலே உணர்விலே தான் செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. நேற்றுக் கூட கேட்டேன், அதில் ஒரு வகை உணர்வு இருந்தது.

ஆகவே, இது சம்பந்தமாக தாங்களோ, முன்னவர் அவர்களோ, நேரிடையாக வானொலி நிலையத்துடன் தொடர்பு கொண்டு, வானொலி நிருபர் ஒருவரே இந்த அவைக்கு வந்து, ஒவ்வொருநாளும் சட்டமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை தொகுத்துஅனுப்பினால், நடைபெறுகிற நிகழ்ச்சிகள் நேர்மையாக எந்தக் கட்சியும் தொடர்பற்ற முறையிலே வானொலியில் வெளியாகும். நிருபர்கள் யாரும் இதற்காக வருத்தப்படக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். எந்தக் கட்சியின் உணர்வும் அந்த நிகழ்ச்சியில் பிரதிபலிக்கக் கூடாது என்றுதான் இந்த ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சி சார்பற்ற முறையில் வானொலியில் செய்தி வரவேண்டும் என்ற உணர்வு சரிதான். இதுபற்றி ஏற்கனவே அவையின் சார்பாக வானொலி நிலையத்தாருக்கு எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது மட்டும் அல்ல, இந்த 1 ஆம் தேதியன்று வானொலியில் என்ன சொன்னார்கள் என்றால், வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலே இடைத்தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். இது எப்படி சரியாகும் ;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைக் கேட்டால் நான் என்ன சொல்வது நான் ஒன்றும் வானொலித் துறை அமைச்சர் அல்ல.

திரு. துரைமுருகன் : 1 ஆம் தேதி அன்று வானொலியில் அறிவிக்கிறபோது வட ஆற்காடு திருப்பத்தூரில் இடைத் தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், இது பத்திரிகைகளிலே வந்து வானொலி திருத்திக் கொள்ள வழி இருக்கும் என்பதால் சொல்கிறேன். இது ஒரு பெரிய தவறான செய்தி அல்லவா.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தினை தாங்கள் ஆராயலாம். வானொலி ஒரு நிருபரை அனுப்பி வைக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டது போல் இதுமாதிரி தவறு செய்வார்களானால் சுட்டிக் காட்டி திருத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கும். வாய்ப்பு இருக்கும். மற்றவர்கள் திருத்தினால் அந்தளவிற்கு கட்டுப்படுத்த முடியாது, வானொலி நிலையத்தாருக்கு ஒரு சங்கடம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். ஆகவே இந்தக் கருத்து பற்றி பேரவைத் தலைவர் வானொலி நிலையத்தாரோடு பேசி ஒரு முடிவிற்கு வரலாம்.

7. அரசினர் தீர்மானம்.

தமிழ்நாட்டில் வறட்சி நிலை, விவாதம்—தொடர்ச்சி.

* திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை அறிக்கைமீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் சேலம் மாவட்ட மக்கள் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

தக்க நேரத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இந்த அறிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். பருவமழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டும் ஏற்பட இருக்கிற அபாயத்தை எதிர் நோக்கியும் ஒரு தடுப்பு நடவடிக்கையாகவும், முன்னெச்சரிக்கைச் செயலாகவும் சில நடவடிக்கைகள் எடுத்து அந்தப் பணிகள் பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. 'ப்ரவன்ஷன் இஸ் பெட்டர் தன் க்யூர்' என்று சொல்வார்கள். அதுபோல் வந்தபின் துன்பப்படுவதை விட வருமுன் காப்பது மேல் என்ற அடிப்படையில் இந்த வறட்சி காரணமாக சில நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியதாகும். அதிலும் இந்த அறிக்கையில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க முன் உரிமை கொடுத்திருப்பதும் அதன்மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருப்பதும் துயர்துடைப்புப் பணிகளாகக் கருதப்படுகின்றன. அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்தாலும்